# குடும்பத்தின் ஆவி

## உறவுமுறையிலான சபையில் வாழ்தல் III

Wayne Jacobsen



மனிதர்களாகிய நாம் சுயாதீனமாக இருக்க வேண்டும் என்று எவ்வளவுதான் முயன்றாலும் சரி, மற்றவர்களுடன் பகிர்ந்து வாழ வேண்டும் என்ற விருப்பம் சில வேளைகளில் எழத்தான் செய்கிறது.

விசேஷமான தருணங்களை நாம் அப்படிப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம். கடந்த சில மாதங்களாக, சாராளும் நானும் கடற்கரைவழியாக நடந்துசெல்கையில், டால்ஃபின் மீன்கள் கூட்டம் கூட்டமாக அலைகளின்மேல் துள்ளிவிளையாடுவதையும், பொங்கிவரும் அலைகளுக்குமுன் படுத்துக்கொண்டு கரைவரை வருவதையும் கண்டுகளித்தோம். அந்தக் காட்சியை எங்களைச்சுற்றி நின்றுகொண்டிருந்த, எங்களுக்குக் கொஞ்சங்கூடத் தெரியாத அந்நியர்களிடம் சுட்டிக்காட்டாமலும், அந்தத் தருணத்தை அவர்களோடு பகிர்ந்துகொள்ளாமலும் இருக்க எங்களால் முடியவில்லை. ஏறக்குறைய நாங்கள் சந்தித்த எல்லாரிடமும் இந்தச் சம்பவத்தை நாங்கள் சொல்லியிருக்கிறோம். அது எவ்வளவு வியப்புக்குரியது!

நாம் பயத்தோடு இருக்கும்போது அல்லது நிச்சயமில்லாமல் இருக்கும்போது அல்லது நமக்கு வழிகாட்டுதல் தேவைப்படும்போது, மற்றவர்கள் நம்மோடு இருப்பதை நாம் விரும்புகிறோம். சாராளும் நானும், முதன் முதலாக, கைசெர் பாலைவனத்திலுள்ள வாலிங் ஏரிக்குச் சுற்றுலா சென்றிருந்தபோது, நாங்கள் சரியான தடத்தில்தான் ஏறிக்கொண்டிருந்தோமா என்று எங்களுக்குத் தெரியவேயில்லை. சுற்றுலா வந்திருந்த இன்னொரு குழுவினர் அதே தடத்தில் கீழே இறங்கி வந்துகொண்டிருந்ததைப் பார்த்தபோது நாங்கள் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்போம் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள். அவர்களைப் பார்த்தபோது, நாங்கள் சரியான தடத்தில்தான் சென்றுகொண்டிருந்தோம் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது; இன்னும் கொஞ்ச தூரத்தில் ஒரு சதுப்பு நிலம் இருக்கிறது என்றும், அதில் கொசுக்கள் ஏராளமாக இருக்கின்றன என்றும் அவர்கள் எங்களை எச்சரித்தார்கள். எனவே, நாங்கள் கொசுக்களுக்கு இரையாவதற்குமுன், அவைகளை விரட்டும் மருந்துகளை ஆயத்தமாக்கிக்கொண்டோம்.

வீடு மாற்றுவது அல்லது பெயிண்ட் அடிப்பது அல்லது சிமெண்ட் கலவையை ஊற்றுவது போன்ற காரியங்களை நான் தனியாகச் செய்ய விரும்புவதில்லை. சில பிரிய நண்பர்களின் உதவியும், நாங்கள் வீடு மாற்றியபோது குடும்பத்தாரின் உதவியும் இல்லாமல், உணவு சமைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு முப்பகுதி மேசையை இரண்டாவது மாடிக்கு என்னால் எப்படி கொண்டுபோயிருக்க முடியும் என்று எனக்குத் தெரியாது. எந்த அளவுக்கு ஒரு காரியத்தை நான் தனியாகச் செய்வதை வெறுக்கிறேனோ, அதே அளவுக்கு ஒரு காரியத்தை இன்னொருவரைத் தனியாகச் செய்வதற்கு விட்டுவிடுவதையும் நான் வெறுக்கிறேன்.

விசேஷமான நேரங்களைப் பகிர்ந்துகொள்ளுதல், வாழ்க்கைப் பாதையில் மற்றவர்களுக்கு உதவிசெய்ய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களுடைய தோள்களின்மேல் இருக்கும் சுமையை இலகுவாக்க வளஆதாரங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்...தேவனுடைய குடும்பத்தின் ஒரு பகுதியாக இருப்பதின் பொருளை இதைவிடச் சிறப்பாக விவரிக்க முடியும் என்று என்னால் கற்பனைசெய்ய முடியவில்லை. ஆனால், அது எப்போதும் ஏன் அவ்வளவு எளிமையாக வேலைசெய்வதில்லை?

***குடும்பத்துக்காக ஏங்குதல்***

ஒருவேளை, தேவன் உங்களுக்குக் காண்பித்த விசேஷமான ஏதோவொன்றை நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டிருக்கக்கூடும்; ஆனால், அவர்களோ அதைத் தள்ளிவிட்டிருப்பார்கள்; இன்னும் சொல்லப்போனால், தாங்கள் கண்டுபிடித்திருப்பது அதைவிட உயர்ந்தது என்று சொல்லியிருப்பார்கள், அல்லது அதைவிட இன்னும் மோசமாக, நீங்கள் கண்டதாகச் சொன்னதில் பிழை இருக்கிறது என்று சொல்லியிருப்பார்கள். ஒருவேளை நீங்கள் உதவி கேட்டிருப்பீர்கள்; ஆனால், மக்கள் உங்கள் வேண்டுகோளைப் புறக்கணித்திருப்பார்கள், அல்லது நீங்கள் ஒருபோதும் கண்டுபிடிக்கமுடியாத நிஜத்தை உங்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணி தவறான பாதையில் உங்களை அனுப்பியிருப்பார்கள். மேலும், நம் நாட்களில், ஐக்கியம் என்பது இன்னொருவனுடைய சுமையை இலகுவாக்குவதற்குப் பதிலாக கோரிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் அவன்மேல் சுமத்தி அவனை அமுக்கிவிடுகிறது.

இந்தக் காரணத்தினால்தான் நாம் இன்று இளைத்துப்போன ஒரு யுகத்தில் வாழ்கிறோமா? இன்று அநேக விசுவாசிகள், ஒன்று, மினுக்கான ஒரு பகட்டு ஆரவாரத்தை அனுபவித்துமகிழ்வதற்காக மட்டுமே தொடர்ந்து கூடிவருவார்கள், அல்லது அவர்கள் தங்களால் செய்ய முடிந்த மிகச் சிறப்பானதைச் செய்துவிட்டு தங்

களுக்குள்ளேயே ஒதுங்கி இருந்துவிடுவார்கள். இந்த இரண்டுமே, நாம் மேலெழுந்தவாரியான ஒரு மட்டத்தைத் தாண்டிச் சென்று மற்றவர்களுடன் உறவுகொள்வதைத் தடுக்கிறது; மேலும் நாம் தேவனுடைய பிள்ளையாக இருப்பதின் மிக வியக்கத்தக்க அம்சத்தை——மலைக்கச்செய்யும் அவருடைய குடும்பத்தின் ஒரு பகுதியாக வாழும் வாழ்க்கையை——அனுபவிப்பதை நம்மிடமிருந்து திருடிக்கொள்கிறது.

பூமிக்குரிய நம் குடும்பங்களில் முறிந்துபோன உறவுகள் நம்மை மிக ஆழமாகக் காயப்படுத்துகின்றன. அதிகமான வலி இருந்தாலுங்கூட, குடும்பத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்ற தணியாத ஏக்கம் இன்னும் மக்களிடம் இருக்கத்தான் செய்கிறது. இதற்கு என்ன காரணம்? தேவன் நம்மை இதற்காகவே சிருஷ்டித்திருக்கிறார் என்பதுதான் காரணம். துரதிருஷ்டவசமாக, இன்றைய நாட்களில், ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கையைக் கண்டுபிடிப்பதில் கிறிஸ்துவின் சரீரம் அவ்வளவு சிறப்பான வெற்றியைப் பெற்றுவிடவில்லை. கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையான சமுதாயத்தையும், அக்கறையையும், ஈடுபாட்டையும், ஒவ்வோர் அவயவத்திற்கும் ஒரு குறிப்பிடத்தக்க இடம் இருப்பதையும், ஒவ்வொருவரும் மதிக்கப்படுவதையும் காண வேண்டும் என்ற ஆசை நிறைவேறாமல் ஏமாற்றமடைந்த, கசப்பான அனுபவங்கள் அநேகருக்கு உண்டு.

துரதிருஷ்டவசமாக, இன்று, நிறுவனங்களின் முன்னுரிமைகளே பொதுவாக விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ள நடத்துகிற சக்தியாக இருக்கின்றன. நாம் அவைகளின் கோரிக்கைகளைக் குருட்டுத்தனமாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; ஆனால், அந்த முன்னுரிமைகள் குடும்பத்திற்கு முரணானவை என்பதை நாம் உணறத் தவறுகிறோம். பல்வகையையும், நம்பகத்தன்மையையும் பாராட்டுவதற்குப்பதிலாக அல்லது ஆவிக்குரிய பயணத்தில் மக்கள் வெவ்வேறு கட்டங்களில் இருப்பதற்கு இடமளிப்பதற்குப்பதிலாக, ஒத்திருப்பதற்கு அவர்கள் அழுத்தப்படுகிறார்கள். ஆரோக்கியமான உறவுகளைக் கட்டுவதற்குப்பதிலாக, தடங்கல் இல்லாமல் நடக்கிற நிகழ்ச்சிநிரல்களே வீரமுடன் செயல்படுத்தப்படுகின்றன. எல்லாருடைய வரங்களையும் வெளியே கொண்டுவருதற்குப்பதிலாக, ஒரு சிலருடைய வரங்கள் மட்டுமே உயர்த்தப்படுகின்றன. உலகத்தில் தேவன் செய்துகொண்டிருக்கும் பரந்த வேலையை அணைத்துக்கொள்வதற்குப்பதிலாகவும், தேவனை அறியாதவர்களுக்கு உண்மையாக ஊழியஞ்செய்வதற்குப்பதிலாகவும், நிறுவனங்கள் தங்களைப் பேணிப் பாதுகாக்கவே இருக்கின்றன. இந்த இயக்கவிதிகள் பிதாவின் குடும்பத்தைப் பேணிவளர்ப்பதற்குப் பதிலாக, மக்கள் கூட்டத்தைப் பொழுதுபோக்காக மகிழ்விப்பதில் பெரிய வெற்றிபெற்றிருக்கின்றன.

***பின்னானவைகளை மறத்தல்***

கலாத்தியர் 5ஆம் அதிகாரத்தில் பவுல் மாம்சத்தின் கிரியைகளைப்பற்றிப் பேசுகிறார்: "...பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள்..." மிக நல்ல நோக்கம் கொண்டவர்களுடைய உறவுகளில்கூட மாம்சத்தின் சில கிரியைகள் எவ்வளவு சீக்கிரத்தில் நிரம்பிவிடுகின்றன என்பது அமைப்புமுறையிலான கிறிஸ்தவத்தில் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் தெரியும். நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்துகொண்டிருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருக்கையிலேயே மாம்சத்தின் இந்தக் காரியங்களில் நாம் சிக்கிக்கொள்ளக்கூடும்.

வலி, தாங்கமுடியாத அளவுக்கு அதிகமாகும்போது, ஒரு சாரார் பிரிந்துபோய் ஒரு புதிய, சிறந்த சரீரத்தை ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் எந்தக் காரியங்களுக்கு விலகி ஓடினார்களோ, ஒரு சில ஆண்டுகளில், அதே காரியங்களில் அவர்கள் சிக்கிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சில அனுபவங்களுக்குப்பின், துடிப்பான சரீர வாழ்க்கையை எப்போதாவது கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கையை அநேக விசுவாசிகள் இழந்துவிடுவது ஆச்சரியம் இல்லையே!

ஆனால், நமக்கு ஏற்பட்ட காயங்களையும், ஏமாற்றங்களையும் கடந்துவருமாறு பிதாவானவர் நம்மை அழைக்கிறார். சிலர் தங்கள் இருதயத்தில் தேவனுடைய நலன்கள் மட்டுமே இருக்கின்றன என்று கூறினார்கள்; ஆனால், இப்படிப்பட்டவர்களால் சுரண்டப்பட்டு, தந்திரமாகக் கையாளப்பட்ட மக்களின் அதிர்ச்சியான கதைகளை நான் கதைகதையாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். 'அன்பு,' 'ஒற்றுமை' என்ற பெயரில், தங்களுடைய மிக ஆழமான பற்றுறுதிகளை(உணர்வுகளை) மறுக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தப்பட்டார்கள். அப்படி மறுக்காதபோது, அவர்கள் இழிவுபடுத்தப்பட்டார்கள், வெளியேற்றப்பட்டார்கள். அந்த அனுபவங்கள் சித்திரவதைகளைப்போல் இருந்தாலுங்கூட, மற்ற விசுவாசிகளுடன் இன்னும் உண்மையான உறவு கொண்டு வாழ வேண்டும் என்று அவர்கள் பசியோடு இருப்பது எனக்குத் தெரியும்.

ஆனால், உண்மையான சரீர வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமானால், அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட காயங்களையும், கடந்த காலத்தில் தோல்விகள் ஏற்பட்டபோது நடந்துகொண்டவிதத்தையும் தாண்டி, தங்களுக்குள் இருக்கும் பசியைப் பின்பற்ற வேண்டும். நாம் தேவனைப் பின்பற்ற முயன்ற விசுவாசிகளாக இருந்தபோதுங்கூட, அந்த உறவுகள் பிதாவினுடைய குடும்பத்தின் உண்மையான ஆவியின்மேல் கட்டப்படவில்லை என்பதை உணர்ந்துகொள்ள, ஒருவேளை அது நமக்கு உதவிசெய்யும். மற்றவர்களிடமிருந்து நாம் என்ன பெற வேண்டும் என்று நாம் உணர்ந்தோமோ அதில்தான் பெரும்பாலும் நாம் கவனம்செலுத்தினோமேதவிர,

மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு தேவன் நம்மை எதிலிருந்து விடுதலையாக்கினாரோ அதின்மேல் கவனம் செலுத்தவில்லை.

நம்மைப் பலிகடாவாகவும், மற்றவர்களை வில்லன்களாகவும் பார்ப்பது எளிது. ஆனால், உண்மை அந்த அளவுக்கு எளிமையானதல்ல. ஆம், ஒருவேளை மற்றவர்கள் உங்களைத் தந்திரமாகக் கையாண்டிருக்கக்கூடும். ஆனால், நாமும் கொஞ்சம் தந்திரமாக நடந்தோம் என்பது உண்மையில்லையா? மக்கள் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நடக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தோம். அப்படி நடக்காதபோது, நாம் ஏமாற்றமடைந்தோம். நம் விருப்பப்படி அவர்கள் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று நாம் முயன்றபோது, நாம் பயன்படுத்த வேண்டும் என்று இயேசு நம்மிடம் ஒருபோதும் கேட்டிராத யுக்திகளை நாம் பெரும்பாலும் பயன்படுத்த முயன்றோம். ஏன்? ஏனென்றால், நிறுவனங்கள் நம் தேவைகளைச் சந்திக்கும்போது நாம் அவைகளைப் பயன்படுத்துவதும், அவைகள் நம் தேவைகளைச் சந்திக்காதபோது அவைகளைப் பழிகூறுவதும் விழுந்துபோன நம் சுபாவத்தில் இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், குடும்பத்தைத் தன்னுள் வைத்துக்கொள்ள முயற்சி செய்கிற ஒரு நிறுவனம் எந்த அளவுக்கு வளர்கிறதோ, அந்த அளவுக்குக் குடும்ப உணர்வு குறைந்துவிடுகிறது; இதற்குக் காரணம் என்னவென்றால், நிறுவனம் என்பது தங்கள் தேவைகளைச் சந்திப்பதற்கும், தங்கள் முன்னுரிமைகளைத் திருப்திப்படுத்துவதற்கும் ஒரு வழி என்று அவர்கள் பார்க்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

அமைப்புமுறையிலான மதம் என்பது சுய-தேவையைப் பரஸ்பரமாக நிறைவேற்றும் இடம் என்று எனக்குத் தெரிந்த ஒரு முன்னாள் பாஸ்டர் வரையறுக்கிறார். ஒருவனுக்கு, போதிக்க வேண்டிய தேவை இருக்கிறது; இன்னொருவனுக்கு போதிக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. ஒருவனுக்கு, ஆராதனை நடத்த வேண்டிய தேவை இருக்கிறது; இன்னொருவனுக்கு ஆராதிக்கும் அனுபவம் தேவைப்படுகிறது. ஒருவனுக்கு, மற்றவர்களை மேய்க்க வேண்டிய தேவை இருக்கிறது; இன்னொருவனுக்குத் தன் பொறுப்பை வேறொருவன் மேல் வைத்துவிட வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. நம் தேவைகள் நம்மை ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கும் போது, நாம் சுரண்டப்படுவோம், நாமும் மற்றவர்களைச் சுரண்டுவோம். இந்த அணுகுமுறை, மக்கள் தேவனுடைய குடும்பமாகச் சேர்ந்து வாழ்கிற ஒரு சூழலைப் பேணிவளர்க்காது என்பது ஆச்சரியம் இல்லை.

***ஒருவருக்கொருவர்***

இவ்வாறு, பிரச்சினையின் வேர் நம் நிறுவனங்கள் அல்ல; மாறாக, நம் சுய-தேவைகளும், தேவனுடனான நம் உறவில் நமக்கிருக்கும் குறைவை நிறைவாக்க மற்ற மக்களை நாடும் நம் முயற்சிகளுமே பிரச்சினையின் வேர். தவறான அந்தக் கருத்தை வலியுறுத்த உங்களால் வேதவாக்கியங்களைக் கண்டுபிடிக்க முடியும்; ஏனென்றால், தம்முடைய கரத்தின் நீட்டிப்பு என்ற முறையில் தேவன் நிச்சயமாக மற்றவர்கள்மூலம் கிரியைசெய்கிறார். ஆனால், நம் சுய-தேவைகளை ஆதாரமாகக்கொண்டுதான் இயேசு தம் சரீரத்தைக் கட்டுகிறார் என்பது தவறு. உண்மை அதுவல்ல.

அவருடனான நம் உறவை வைத்து மட்டும்தான் அவர் குடும்ப வாழ்க்கையைக் கட்டுகிறார். கர்த்தாதி கர்த்தரும், சபையின் தலையும், உலகத்தின் இரட்சகரும் என்ற முறையில் அவரில் மட்டுமே நம் எல்லாத் தேவைகளும் சந்திக்கப்பட முடியும். அவை முறையானவை என்றால், அவர் அவைகளைச் சந்திப்பார். அதற்குப் பதிலாக, அவை வெறுமனே நம் மாம்சத்திலிருந்து கொடுங்கோல் ஆட்சிபுரியும் இச்சைகள் என்றால், அவர் நம்மை அவைகளிலிருந்து விடுதலையாக்க விரும்புவார். அவைகள் சரியாகும்போது மட்டுமே, இயேசு நமக்காகத் திட்டமிட்ட குடும்ப வாழ்க்கைக்கு நாம் தயாராக இருப்போம்.

எல்லாவற்றுக்காகவும்——நம் திருப்தி, நம் வழிநடத்துதல், நம் நீதி, நம் ஊழியம், நம் வளஆதாரம்——நாம் அவரை நம்பக் கற்றுக்கொள்கையில், கடைசியாக நாம் மற்ற விசுவாசிகளுடன் ஆரோக்கியமான உறவுகளைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பிக்கலாம். நமக்கு ஜீவனைக் கொண்டுவர நம் கண்கள் இயேசுவின்மேல் இருப்பதால், நாம் விரும்புவதை அடைய நாம் மற்றவர்களை இனிமேல் தந்திரமாகக் கையாளவேண்டிய தேவை இல்லை. நாம்

**ஒருவருக்கொருவர் விடுக்கப்படும் அழைப்பு**

ஒருவரிலொருவர் அன்புகூருங்கள் - யோவான் 15:12
கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் - ரோமர் 12:10
ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்குங்கள் - ரோமர் 14:19
ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள் - கலா. 5:13
ஒருவருக்கொருவர் தயவாயிருங்கள் - எபே. 4:32
நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள் - எபி. 3:13
ஒருவரையொருவர் தாங்குங்கள் - எபே. 4:2
உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள் - யாக். 5:16
அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனியுங்கள் - எபி. 10:24
ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள் - ரோமர் 15:14
ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து...கலா. 6:2
ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் - எபே. 4:32
ஒருவரையொருவர் தேற்றுங்கள் - 1 தெச. 4:18
ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் - எபே. 5:21
ஒருவரையொருவர் உபசரியுங்கள் - 1 பேதுரு 4:9
ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்ளுங்கள் - அப். 4:34-35
ஒருவருக்கொருவர் போதியுங்கள் - கொலோ. 3:16

விரும்புவதை அடைவதற்கு அவர் மற்ற விசுவாசி களை அடிக்கடிப் பயன்படுத்தினாலும், யாரிடமிருந்து நாம் அதை எதிர்பார்க்கிறோமோ, அவர்களை அவர் பயன்படுத்தமாட்டார்.

எனவேதான், நாம் இன்று பார்ப்பதைவிட மிகவும் வித்தியாசமான ஒரு சித்திரத்தை வேதவாக்கியங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. கூலிக்கு அமர்த்தப்பட்ட வேலையாட்களும், பெருஞ்சுமையான அலுவலகச் செலவுகளும் கொண்ட பிரம்மாண்டமான நிறுவனங்களைப்பற்றிய சித்திரத்தை அது வழங்கவில்லை. அதற்குப்பதிலாக, இயேசுவுக்குச் செவிகொடுக்கச் சேர்ந்து வளர்ந்துகொண்டிருக்கிற, ஒருவரையொருவர் தந்திரமாகக் கையாளாமல், விருப்பத்தோடும், விடுதலையோடும் தங்கள் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ளக் கற்றுக்கொள்கிற ஒரு கூட்டம் மக்களைப்பற்றிய ஒரு சித்திரத்தை அது வழங்குகிறது. ஜீவனின் நிஜத்தில் மக்கள் சேர்ந்து பகிர்ந்துகொள்ளும் அக்கறையும், ஞானமும், உற்சாகமூட்டுதலும் மட்டுமே ஆதிச் சபை புரிந்துகொண்ட ஒரே சரீர வாழ்க்கையாகும்.

மக்கள் நாற்காலிகளில் வரிசையாக உட்கார்ந்திருப்பதுதான் சபை என்று அவர்கள் ஒருபோதும் கருதியிருக்க மாட்டார்கள். அதற்குப்பதிலாக, சபை என்பது விசேஷமான தருணங்களைப் பகிர்ந்துகொள்வதிலும், வாழ்க்கைப் பயணத்தில் ஒருவருக்கொருவர் உதவிசெய்வதிலும், ஒருவர் பாரத்தை ஒருவர் இலகுவாக்குவதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதிலும் ஈடுபட்டிருந்த முழுச் சரீரம் என்பதை அவர்கள் பார்த்தார்கள். எனவேதான், ஆதிச் சபையின் வாழ்க்கையை புதிய ஏற்பாடு முழுவதும் இழையோடுகிற "ஒருவருக்கொருவர்" என்ற வேதவாக்கியங்களில் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். (பட்டியலைப் பார்க்கவும்).

பிதாவின் குடும்பத்தில் ஈடுபாடுகொண்டு வாழ்வது என்பதை அவர்கள் இப்படித்தான் பார்த்தார்கள். கிறிஸ்துவை மையமாகக் கொண்ட நட்பின் விளைவாக, மனித வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சிகளில், அவர்கள் மனதுருக்கமும், சேவையும் நிறைந்த காரியங்களைச் செய்தார்கள். கிறிஸ்துவில் வளர்வதற்கு ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் இருந்ததாலும், அவர்கள் சரீரத்திற்குக் கொண்டுவந்த வரங்களினிமித்தமும், வெளிச்சத்தினிமித்தமும் மதிக்கப்பட்டதாலும் மட்டுமே சரீரம் தழைத்தோங்கியது. அவர்கள் நிர்வகிக்கப்பட வேண்டிய அல்லது பொழுதுபோக்காய் மகிழ்விக்கப்பட வேண்டிய ஒரு கூட்டம் மக்கள் அல்ல. ஒருவனும் மற்றவர்களை இறுமாப்பாய் ஆள வேண்டிய தேவை இருக்கவில்லை. ஒருவனும் ஆவிக்குரியநிலையில் தாழ்ந்தவனாக உணர வேண்டிய தேவை இருக்கவில்லை. அதற்குப்பதிலாக, தங்கள் தேவைகள் சந்திக்கப்பட அவர்கள் இயேசுவை நோக்கிப்பார்த்தார்கள்; மற்றவர்களுடைய தேவைகளைத் தங்களுடைய தேவைகளைப்போல் கருதி மனமுவந்து வாழ்ந்தார்கள்.

***இலவசமாய்ப் பெற்று, இலவசமாய்க் கொடுங்கள்***

கிறிஸ்துவில் நமக்கு என்ன கிடைக்கவில்லையோ அதைப் பெறுவதற்காக நாம் சரீரத்திற்கு வருவதில்லை என்பதைக் கவனியுங்கள். அது பின்னோக்கிப் போவதாகும். அவருடனான நம் உறவின் நிறைவை நாம் சரீரத்திற்குக் கொண்டுவருகிறோம். இந்தக் காரணத்தினால்தான் "ஒருவரிடமிருந்து ஒருவர் அன்பைப் பெறுங்கள்," அல்லது "மற்றவர்களிடமிருந்து சேவையைப் பெறுங்கள்" என்று இயேசு சொல்லவில்லை. மாறாக, "ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூருங்கள்," "ஒருவரையொருவர் சேவியுங்கள்" என்று இயேசு கூறினார். நாம் மற்றவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறோமோ அதுவல்ல நாம் சரீர வாழ்க்கையை அனுபவிப்பதற்கான காரணம். மாறாக, நாம் மனமுவந்து மற்றவர்களுக்குக் கொடுப்பதால்தான் நாம் சபை வாழ்க்கையை அனுபவிக்கிறோம்.

இந்தக் காரியத்தை, "இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்," என்று இயேசு தம் சீடர்களிடம் கூறினார். யாரிடமிருந்து பெற்றுக்கொண்டோம்? ஒருவரிடமிருந்து ஒருவர் பெற்றுக்கொண்டோமா? இல்லை. அவரிடமிருந்து பெற்றுக்கொண்டதை அவர்கள் பகிர்ந்துகொள்கிறார்கள். இந்தப் பகுதியை Message என்ற படிவம் மொழிபெயர்த்திருக்கும் விதத்தை நான் விரும்புகிறேன் : "நீங்கள் தாராளமனப்பான்மையுடன் நடத்தப்பட்டிருக்கிறீர்கள். எனவே, தாராளமானமனப்பான்மையுடன் அன்புகூருங்கள்."

இதை நான் நேசிக்கிறேன்; ஏனென்றால், அது காரியங்களை அதினதின் இடத்தில் ஒழுங்காக வைக்கிறது. தேவனுடைய தாராளமனப்பான்மையை நான் ஒவ்வொரு நாளும் அனுபவிக்காதவரை, நான் தாராளமனப்பான்மையுடன் நடக்க முடியாது. நான் அவருடைய தாராளமனப்பான்மையை அனுபவித்திருந்தால், என்னைச் சுற்றியிருப்பவர்களையும் அதே தாராளமனப்பான்மையுடன் நடத்துவதை என்னால் தவிர்க்கமுடியாது. என்னைப் பொறுத்தவரை, அந்தத் தாராளமனப்பான்மையை ஒருபோதும் கண்டுபிடிக்காதவர்கள்தான் மிகச் சோகமான விசுவாசிகள். அவருடைய ஜீவனை முழு இருதயத்தோடும் அணைத்துக்கொள்வதற்குப்பதிலாக, தங்கள் வளஆதாரங்களையும்,. எதிர்பார்ப்புக்களையும் ஆதாரமாகக்கொண்டு அவர்கள் வாழ்வதால், தேவனை அவர்கள் ஓர் ஏழ்மையான தேவனாகப் பார்க்கிறார்கள். தங்களுக்குச் செலவழிக்கக்கூட அவர்களுக்குப் போதுமான நேரமும், சக்தியும் ஒருபோதும் இருப்பதில்லை; இப்படியிருக்கையில், மற்றவர்கள் நலனில் அக்கறைகொள்வதைப்பற்றிப் பேசவே வேண்டாம்.

ஆயினும், தேவன் நம்மேல் பாராட்டுகிற வியத்தகு அன்பினால் நாம் நிரம்பி, நம்மைக்குறித்த அவருடைய குறிக்கோளை நாம் அணைத்துக்கொள்ளும்போது, மற்ற மக்களை நாம் அதற்குப்பதிலாக வைக்க வேண்டிய தேவை இல்லை. அதுபோன்ற மக்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, வியத்தகு ஒரு காரியம் நிகழ்க்கிறது. அதுதான் குடும்பம். பல வேளைகளில், எனக்குக் கொஞ்சங்கூடத் தெரியாத அந்நியர்கள் என்னை விமான நிலையத்திலிருந்து அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டுக்குப் போய்ச் சேருவதற்குள், நாங்கள் ஒருவரையொருவர் நீண்ட காலமாக அறிந்தவர்கள்போல் உணர்ந் திருக்கிறோம்.

***சாகசச்செயலில் நண்பர்கள்***

“ஒரு சபையைக்” கண்டுபிடிக்க வேண்டும் அல்லது ஒரு புதிய சபையை ஆரம்பிக்க வேண்டும் என்று கவலைப்படுவதை விட்டுவிட்டு, பிதாவின் அன்பை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புக் களை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், அவருடைய அன்பில் இயல்பாக வாழக் கற்றுக் கொள்வோம்; அப்போது, ஒவ்வொரு நாளும் உண்மையாகவே நாம் சபையில்தான் வாழ்ந்துகொண்டிருப்போம் என்று நான் நினைக்கிறேன்.

அநேகருடைய பிரச்சினை என்னவென்றால், தேவனை நம்பி வாழ்கிற வாழ்க்கை அவர்களைப் பொறுத்தவரை ஒதுக்குப்புறம்பான ஒரு காரியம். அதுபோல, பரஸ்பரமாக உற்சாகமூட்டுகிற, பக்தியுண்டாக்குகிற விசுவாசி களுடனான உறவுகளும்கூட ஒதுக்குப்புறம்பாகவே இருக்கின்றன. நாம் வெறுமனே வேளாவேளைக்கு ஓர் அறையில் விசுவாசிகளுடன் உட்கார்ந்துகொண்டு, அதைக் ‘குடும்பம்’ என்றழைப்பதால், நாம் குடும்பத்தின் நிறைவை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறோம். உண்மை என்னவென்றால், ஒருவேளை நாம் இன்னும் ஆரம்பித்திருக்கவே மாட்டோம்.

தேவன் மட்டுமே உங்கள் வாழ்க்கையின் எல்லா ஆசைகளுக்கும், எல்லாத் தேவைகளுக்கும் ஒரே ஊற்றாக மாறுவாராக. அவரை நம்பக் கற்றுக்கொள்கிற சாகசச் செயலில் தொடர்ந்து செல்லுங்கள். அப்போது, அதே பயணத்தில் சென்றுகொண்டிருக்கிற மற்ற விசுவாசிகளுடன் அவர் உங்களை இணைப்பதை நீங்கள் சீக்கிரம் காண்பீர்கள். அது மக்கள் கூட்டம் இல்லாத இடங்களில், நடந்துகொண்டிருக்கிற மற்ற மக்களைச் சந்திப்பது போல் இருக்கும். அங்கு உடனடியாக, நீங்கள் செய்துகொண்டிருக்கும் அதே காரியத்தைச் செய்வதற்கு மற்றவர்களைப் பலவந்தம் செய்ய வேண்டும் என்ற ஆசை இல்லாமல், மற்றவர்களுக்கு உதவிசெய்ய நீங்கள் அனுபவித்ததைப் பகிர்ந்துகொள்ள ஒரு தொடர்பு, ஒரு மனவிருப்பம், ஏற்படும்.

தேவன் உங்களை நடத்தினால், கூடிவருவதற்கான வழிகளைக் கண்டுபிடியுங்கள்; ஒருவரிலொருவர் எப்படி அக்கறைகொள்வது என்பதைக் கண்டுபிடியுங்கள். இது குடும்பத்தில் மும்முரமாக ஈடுபட:வம், மற்றவர்களுக்கு உதவ சுறுசுறுப்பாக செயல்படுபவனாக மாறவும் நீங்கள் விரும்பி எடுக்கும் தீர்மானம் என்பதை நான் வலி யுறுத்த விரும்புகிறேன். இது நாம் வீட்டில் சும்மா உட்கார்ந்துகொண்டு, நம் பெருவிரல்களைச் சோம்பேறித் தனமாகச் சுழற்றிக்கொண்டிருந்தால் அல்லது ஆராதனையில் உட்கார்ந்துகொண்டு, பிரசங்கம் முடிவதற்காகக் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால், நடந்துவிடாது. மாறாக, இது தேவனுடன் சேர்ந்து சாகசச் செயலில் ஈடுபட மக்கள் தொடர்ந்துசெல்கையிலும், பயணத்தில் உற்சாகமூட்டுபவனாக மற்றவர்களுடைய வாழ்க்கையில் பங்குபெற மும்முரமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கையிலும் நிகழ்கிறது.

உங்களுக்கு அருகே இருக்கும் மற்ற விசுவாசிகளிடமும் அதே வேட்கை இருக்கிறது என்று நீங்கள் கேள்விப் படும்போது, போய் அவர்களைப் பாருங்கள். கடந்த கோடையில் நான் சில கூட்டங்களில கலந்துகொண்டேன்; அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள மக்கள் நீண்ட தூரத்திலிருந்துகூட வந்திருந்தார்கள். இதுபோன்ற பயணத்தில் சென்றுகொண்டிருக்கிற மற்ற மக்களையும் சந்திக்க வேண்டும் என்பதற்காக வந்திருந்தார்கள். நீங்கள் கொஞ்சப்பேர் சேர்ந்து ஏற்கெனவே அப்படிச் செய்ய முயன்று, அது சரிப்பட்டு வந்ததுபோல் தோன்ற வில்லையென்றால், உங்களுக்கு உதவ யாரையாவது அழைத்துப் பேசுங்கள்; தேவன் என்ன சொல்கிறார் என்பதைக் கேளுங்கள்.

விசேஷமான தருணங்களைப் பகிர்ந்துகொள்ளவும், தேவனுடைய ஜீவனில் வளர மக்களுக்கு உதவவும், இந்த வாழ்க்கையில் நம்மை அழுத்துகிற பாரங்களை இறக்கிவைக்கவும் நம்மை அனுமதிக்கிற இப்படிப்பட்ட உறவுகளைப்போல் வேறொன்றும் இல்லை. இது நீங்கள் நினைப்பதுபோல் அவ்வளவு கடினமானதல்ல. இதனால் வரும் மகிழ்ச்சியை விவரிக்கவேமுடியாது.

இதன் ஒரு பகுதியாக இருக்கவே அவர் உங்களை உண்டாக்கினார்.